Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 171 | உள்ளூர் - 20.06.2026 | சனி | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 171 | வெளியூர் - 21.06.2026 | ஞாயிறு | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |






தொட்டதெல்லாம் துலங்க... எளிய பரிகாரங்கள்!

“தமிழக பொதுப்பணித்துறையில் 760 அப்ரண்டிஸ் இடங்கள்...!

டிக்கெட் இல்லாமல் பயணம்; ரயிலில் இனி ரூ.500 அபராதம்!

செந்தில் பாலாஜி வீட்டில் போலீசார்!


## ஜனாதிபதி திரவுபதி முர்மு பிறந்தநாள்: பிரதமர், துணை ஜனாதிபதி வாழ்த்து!



புதுடெல்லி, ஜூன். 20–

இந்தியாவின் முதல் பழங்குடியின பெண் ஜனாதிபதி திரவுபதி முர்மு தனது 68–வது பிறந்தநாளை கொண்டாடுகிறார். இந்த நிலையில் ஜனாதிபதி திரவுபதி முர்முவின் பிறந்தநாளை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி, துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பிரதமர் மோடி வெளியிட்டுள்ள வாழ்த்துப் பதிவில், “இந்திய ஜனாதிபதி திரவுபதி முர்முவுக்கு மனமார்ந்த பிறந்தநாள் வாழ்த்துகள். துணிச்சல், எளிமை, பணிவு மற்றும் பொதுச் சேவைக்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்பு ஆகியவற்றால் குறிக்கப்பட்ட அவரது பயணம், நாடு முழுவதும் உள்ள மக்களுக்குத் தொடர்ந்து உத்வேகம் அளிக்கிறது. தனது பல ஆண்டுகால பொது வாழ்வில், அவர் தேசத்திற்கு மிகச் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்; குறிப்பாக, நலிந்த மற்றும் விளிம்புநிலை மக்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டவர். இந்தியாவின் வளர்ச்சிக்கான அவரது அசைக்க முடியாத அர்ப்பணிப்பு மிகவும் ஊக்கமளிக்கிறது. தேச சேவையில் அவர் நீண்ட மற்றும் ஆரோக்கியமான வாழ்வைப் பெறட்டும். இன்று ஒடிசாவில் நடைபெறும் நிகழ்ச்சியில் அவரைச் சந்திப்பதை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள வாழ்த்துப் பதிவில், “இந்தியாவின் ஜனாதிபதி திரவுபதி முர்முவுக்கு மனமார்ந்த பிறந்தநாள் வாழ்த்துகள். ஜனாதிபதி திரவுபதி முர்மு, நலிந்த மக்களின் நலனுக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து, தேச சேவைக்குத் தன்னை அர்ப்பணித்துள்ளார். அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் சமூக நலனுக்கான அவரது குறிப்பிடத்தக்க அர்ப்பணிப்பு, நாடு முழுவதும் உள்ள மக்களுக்குத் தொடர்ந்து உத்வேகம் அளிக்கிறது.

எளிமை, பணிவு மற்றும் பொதுச் சேவைக்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்பு ஆகியவற்றால் வரையறுக்கப்பட்ட அவரது வாழ்க்கையும் பொதுப் பயணமும், நாடு முழுவதும் எண்ணற்ற மக்களுக்குத் தொடர்ந்து ஊக்கமளிக்கின்றன. தேச சேவைக்குத் தொடர்ந்து பங்களிக்கும் அவர், நீண்ட, ஆரோக்கியமான மற்றும் நிறைவான வாழ்க்கையை வாழ நான் பிரார்த்திக்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

## ‘மோடி சிறந்த தலைவர்.. புத்திசாலித்தனமாக செயல்படுகிறார்’ - டிரம்ப் புகழாரம்!



வாஷிங்டன், ஜூன். 20–

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், பேட்டி ஒன்றில் பிரதமர் மோடியை வெகுவாகப் புகழ்ந்து பேசியுள்ளார். அவர் பேசியது பின்வருமாறு;

“இந்திய பிரதமர் மோடி மிகவும் சிறந்த தலைவர். அவர் போர்களில் இருந்து விலகி இருக்கிறார். எந்தவொரு போரிலும் சிக்காமல், நாட்டின் அமைதியைப் பேணுகிறார். அவருடைய இந்த அணுகுதல் மிகவும் புத்திசாலித்தனமானது.

உண்மையில் இந்தியாதான் மிகப்பெரிய நாடு. அவர் 1.5 பில்லியன் மக்களின் பிரதிநிதி. இந்தியாவில் முன்பு அடிக்கடி பிரதமர்கள் மாறிக்கொண்டே இருந்த சூழலில், பிரதமர் மோடி பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளுக்கும் மேலாக நிலையான ஆட்சியை வழங்கி வருகிறார். அவர் அமைதியான தோற்றத்தைக் கொண்டிருந்தாலும், கொள்கைகளில் மிகக் கண்டிப்பான மற்றும் வலிமையான தலைவர்.” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய–அமெரிக்கா உறவு கடந்த ஓராண்டாகச் சீர்குலைந்து வரும் நிலையில், அதனை சரிசெய்யும் முயற்சியாக, ஜி–7 உச்சிமாநாட்டின்போது டிரம்ப்பும் மோடியும் சந்தித்துப் பேசியது குறிப்பிடத்தக்கது.

# அமைதி ஒப்பந்தம் எதிரொலி: கச்சா எண்ணெய் விலை போருக்கு முந்தைய நிலையை நோக்கி வீழ்ச்சி!!




வாஷிங்டன், ஜூன். 20–

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே இடைக்கால அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானதைத் தொடர்ந்து, உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை வேகமாக குறைந்துள்ளது. ஹார்முஸ் ஜலசந்தி மீண்டும் திறக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டதால், எண்ணெய் விநியோகம் சீராகும் என்ற நம்பிக்கை முதலீட்டாளர்களிடம் ஏற்பட்டுள்ளது.

பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை பீப்பாய்க்கு இன்று மேலும் 1.5% குறைந்து 78.34 டாலராகவும், அமெரிக்க வெஸ்ட் டெக்சாஸ் இன்டர்மீடியேட் (WTI) எண்ணெய் 1.8% சரிந்து 75.43 டாலராகவும் வர்த்தகமானது. கடந்த வாரத்துடன் ஒப்பிடும்போது இரு வகை எண்ணெய் விலைகளும் 15%க்கும் அதிகமாக வீழ்ச்சியடைந்து, போர் தொடங்குவதற்கு முந்தைய நிலையை நெருங்கியுள்ளன.

பிப்ரவரி 28–ஆம் தேதி அமெரிக்கா மற்றும் இஸ்ரேல், ஈரானின் அணு திட்டத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து போர் வெடித்தது. அதற்கு பதிலடியாக ஈரான் ஹார்முஸ் ஜலசந்தியை மூடியது. இதனால் உலகளாவிய எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டு விலைகள் உயர்ந்தன.

தற்போது அமைதி ஒப்பந்தம் கையெழுத்தான நிலையில், ஈரான் மீதான எண்ணெய் தடைகள் நீக்கப்பட வேண்டும் என்றும், தனது எண்ணெயை சுதந்திரமாக ஏற்றுமதி செய்ய அனுமதிக்க வேண்டும் என்றும் ஈரான் வலியுறுத்தியுள்ளது.

இதற்கிடையில், அமெரிக்க மத்திய வங்கி இந்த ஆண்டு வட்டி விகிதத்தை உயர்த்தக்கூடும் என்ற சைகையால் சில பங்குச் சந்தைகளில் கலவையான நிலை காணப்பட்டது. இருப்பினும், எண்ணெய் விலை சரிவு மற்றும் போர் முடிவுக்கு வரும் என்ற நம்பிக்கை உலக சந்தைகளில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் பெட்ரோல் விலையும் குறையத் தொடங்கியுள்ள நிலையில், வரவிருக்கும் இடைத்தேர்தல்களை முன்னிட்டு எரிபொருள் விலையை குறைவாக வைத்திருக்கவே அதிபர் டிரம்ப் விரும்புவதாக பொருளாதார நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

## இந்தியக் கடற்படைக்கு புதிய பலம்: 3 போர்க்கப்பல்களை நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார் பிரதமர் மோடி!

புதுடெல்லி, ஜூன். 20–

இந்தியப் பெருங்கடல் பகுதியில் நாட்டின் பாதுகா ப்பை பல மடங்கு அதிகரிக்கும் வகையில், இந்தியாவில் 75 சதவீதத்திற்கும் மேல் உள்நாட்டுத் தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட 3 புதிய அதிநவீன போர்க்கப்பல்களை நாளை (ஜூன் 21) இந்தியக் கடற்படையில் அதிகாரப்பூர்வமாக இணைக்கப்படு கின்றன. நாளை கொல்கத்தா வில் உள்ள சியாம பிரசாத் முகர்ஜி துறைமுகத்தில் நடை பெறும் மாபெரும் விழாவில், பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் முன்னிலையில் இந்த மூன்று கப்பல்களையும் நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட உள்ளன. மத்திய அரசின் ‘சுயசார்பு இந்தியா’ திட்டத்தின் கீழ், இந்தியக் கடற்படையின் போர்க்கப்பல் வடிவமைப்புப் பணியகம் இக்கப்பல்களை வடிவமைத்து ள்ளது. கொல்கத்தாவைச் சேர்ந்த பொதுத்துறை நிறுவ னமான கார்டன் ரீச் ஷிப் பில்டர்ஸ் அண்ட் இன்ஜினியர்ஸ் இந்த 3 கப்பல்களையும் மிக நேர்த்தியாகக் கட்டியெழுப்பியுள்ளது.

ஒரே நேரத்தில் வெவ்வேறு திறன்களைக் கொண்ட மூன்று முன்னணி கப்பல்கள் கடற்படையில் இணைக்கப்படுவது இந்திய வரலாற்றில் ஒரு மைல்கல்லாகப் பார்க்கப்படுகிறது.







**ஐஎன்எஸ் துனகிரி (INS Dunagiri) ஸ்டெல்த் போர்க்கப்பல்..**

‘புராஜெக்ட் 17A’ திட்ட த்தின் கீழ் தயாரிக்கப்பட்ட 5–வது அதிநவீன ஸ்டெல்த் ஃபிரிகேட் ரகப் போர்க்கப்பல் ஆகும். எதிரி நாடுகளின் ரேடார்களின் கண்களில் படாமல் கடலில் மறைந்து பயணிக்கும் பிரத்யேக வடிவமைப்பு கொண்டது.

இதில் எதிரிகளின் இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கும் பிரம்மோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணை கள் மற்றும் நடுத்தர தூர வான் பாதுகாப்பு ஏவுகணை அமைப்புகள் பொருத்தப்பட்டு ள்ளன.

**ஐஎன்எஸ் அக்ராய் (INS Agray) நீர்மூழ்கி வேட்டையாடி..**

இது அர்னாலா கிளாஸ் எனப்படும் ஆழமற்ற கடற்பகுதியில் பயணிக்கும் நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்புப் போர்க்கப்பல் ஆகும். கடலோரப் பகுதிகள் மற்றும் குறைந்த ஆழம் கொண்ட கடல் பகுதிகளில் எதிரி நாட்டு நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்டறியும் மேம்பட்ட சோனார் கருவி களைக் கொண்டுள்ளது.

நீர்மூழ்கிக் கப்பல்களை நீருக்குள்ளேயே அழிக்கும் இலகுரக டார்பிடோக்கள் மற்றும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ராக்கெட் லாஞ்சர்கள் இதில் உள்ளன.

**ஐஎன்எஸ் சன்ஷோதக் (INS Sanshodhak) பெரிய ஆய்வுக் கப்பல்..**

இது கடலாய்வு பணிக ளுக்காக வடிவமைக்கப்பட்ட 4–வது பெரிய சர்வே கப்பல் ஆகும். ஆழ்கடல் மற்றும் கடலோரப் பகுதிகளில் உள்ள நிலப்பரப்புகளைத் துல்லியமாக வரைபடம் தயாரிக்க உதவும்.

தானியங்கி முறையில் இயங்கும் நீர்க்கீழ் வாக னங்கள் மற்றும் ரிமோட் மூலம் இயக்கப்படும் கருவி கள் இதில் பொருத்தப்பட்டு ள்ளன. இந்தக் கப்பல்களின் கட்டுமானத்தில் 75%–க்கும் அதிகமான பொருட்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டவை ஆகும். இத்திட்டத்தின் மூலம் இந்தியாவின் 200–க்கும் மேற்பட்ட சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவ னங்கள் வேலைவாய்ப்புகளையும், பொருளாதாரப் பயன்களையும் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

சீனா மற்றும் பாகிஸ்தான் நாடுகளின் கடல்சார் அச்சுறுத்தல்கள் அதிகரித்து வரும் வேளையில், இந்த 3 நவீன கப்பல்களின் வருகை இந்தியக் கடல் எல்லையைப் பாதுகாப்பதில் மிக முக்கிய மான பங்குகளை வகிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




தலையங்கம்
மதுரை மணி
சனிக்கிழமை 20.06.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆனி மாதம் 06-ம் தேதி

# ஓரணியில் தவெக, திமுக, அதிமுக: காவிரி பிரச்சினையில்!




காவிரி நதி நீர் பங்கீடு விவகாரம் மற்றும் மேகதாதுவில் அணை கட்டும் கர்நாடகாவின் முயற்சிக்கு எதிராக தமிழக சட்டசபையில் முதலமைச்சர் விஜய் மேகதாது அணை விவகாரம் தொடர்பாக அரசின் தனி தீர்மானம் கொண்டு வந்தார். இதற்கு அனைத்து கட்சி உறுப்பினர்களும் ஆதரவு தந்து தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றினர். காவிரி நடுவர் மன்றம் 5-2-2007 அன்று அளித்த இறுதித் தீர்ப்பையும், உச்சநீதிமன்றம் 16-2-2018 அன்று அளித்த தீர்ப்பையும் மதிக்காமல், சம்பந்தப்பட்ட படுகை மாநிலங்களின் இசைவை பெறாமல், மத்திய அரசின் எந்தவித அனுமதியைப் பெறாமல் கர்நாடக அரசு தன்னிச்சையாக காவிரி நதியின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்ட முயற்சி மேற்கொள்வதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதால், கர்நாடக அரசின் இச்செயலுக்கு கடுமையான எதிர்ப்பை தமிழ்நாடு தெரிவிக்கிறது என முதலமைச்சர் விஜய் பேரவையில் கூறினார்.

கர்நாடக அரசின் மேகதாது அணை திட்டத்திற்கு தொழில்நுட்பம், சுற்றுச்சூழல் உள்பட எவ்வித அனுமதியும் அளிக்கக்கூடாது என மத்திய அரசை இப்பேரவை வலியுறுத்துகிறது என கூறிய விஜய் காவிரிப் பிரச்சினை தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநிலங்களின் உணர்வுப்பூர்வமான பிரச்சினை என்றார். ஆதலால், கர்நாடக அரசு மேகதாதுவிலோ அல்லது காவிரிப்படுகையில் வேறு எந்த இடத்திலோ அணை அல்லது எவ்வித புதிய நீர்த்தேக்க திட்டத்தை, பிற படுகை மாநிலங்களின் இசைவு இன்றியும், மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமலும் மேற்கொள்ளக்கூடாது என கர்நாடக அரசினை அறிவுறுத்துமாறு மத்திய அரசை இப்பேரவை வலியுறுத்துகிறது என குறிப்பிட்டார்.

கர்நாடக அரசின் விரிவான திட்ட அறிக்கையை பரிசீலிக்கவோ, அதன்மீது நடவடிக்கை மேற்கொள்ளவோ அல்லது அதற்கு அனுமதி வழங்கவோ கூடாது என்று மத்திய நீர்வள குழுமத்தையும் இப்பேரவை வலியுறுத்துகிறது என குறிப்பிட்ட விஜய், கர்நாடக அரசின் இந்த முயற்சியை முறியடித்து, தமிழக விவசாயிகள் நலனைப் பாதுகாத்திட தமிழ்நாடு அரசு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் இப்பேரவை தனது ஆதரவை ஒருமனதாக தெரிவித்துக்கொள்கிறது என்றார். முதலமைச்சர் விஜய் முன்மொழிந்த தனித்தீர்மானத்தை ஆதரித்து கூட்டணி மற்றும் எதிர்க்கட்சி தலைவர்கள் பேசினார்கள். காங்கிரஸ், மதிமுக, தேமுதிக, பாமக, அதிமுக, திமுக என அனைத்து கட்சி உறுப்பினர்களும் மேகதாது அணைக்கு எதிராக முதலமைச்சர் விஜய் கொண்டு வந்த தனித்தீர்மானத்தை ஆதரித்தனர். இதனை அடுத்து ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. முன்னதாக தீர்மானத்தின் மீது பேசிய எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின், காவிரி நதி நீர் பிரச்சினையில் கடிதம் மட்டும் எழுதாமல் அனைத்து கட்சி உறுப்பினர்களும் நேரடியாக டெல்லி சென்று மத்திய அரசிடம் ஒற்றுமையாக கோரிக்கையை முன் வைக்க வேண்டும் என யோசனை கூறினார்.

# ‘Version 2.01 server’! நல்ல செய்தி சொன்ன EPFO..!!




புதுடெல்லி, ஜூன் 20–
இந்தியாவில் கோடிக்கணக்கான பிஎஃப் சந்தாதாரர்களுக்கு குட்நியூஸ் வெளியாகியுள்ளது. பிஎஃப் கணக்கில் இருக்கும் பணத்தை இபிஎஃப்ஓ (EPFO) சந்தாதாரர்கள் UPI மற்றும் ஏடிஎம் கார்டுகள் மூலமாகவே நேரடியாக எடுப்பதற்கான புதிய வசதியை அறிமுகப்படுத்தும் இறுதி கட்டப் பணிகளில் மத்திய தொழிலாளர் அமைச்சகம் ஈடுபட்டுள்ளது.

புதிய ‘EPFO 3.0’ திட்டம் மூலம் ‘Version 2.01 server’ பயன்பாட்டுக்கு வந்தவுடன், தகுதியுள்ள உறுப்பினர்கள் தங்களின் ஆதார் மற்றும் வங்கி கணக்குடன் இணைக்கப்பட்ட UPI ஐடி அல்லது ஏடிஎம் கார்டுகளைப் பயன்படுத்தி நேரடியாக பிஎஃப் பணத்தை பெற்று கொள்ளலாம். இதனால் தேவையற்ற அலைச்சல்களும், வார கணக்கிலான காத்திருப்புகளும் குறையும். இந்த மாத இறுதிக்குள்ளாகவே பிஎஃப் பணத்தை யுபிஐ, ஏடிஎம் மூலம் எடுக்கும் வசதி நடைமுறைக்கு வந்துவிடும் என தகவல்கள் தெரிவிக்கின்றன. ஏனெனில் மத்திய தொழிலாளர் அமைச்சகம், பிஎஃப் அமைப்பு இணைந்து நடத்திய சோதனை ஓட்டம் வெற்றி அடைந்துள்ளது. இதனால் அனைத்து சந்தாதாரர்களுக்கும் இது விரைவில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. வழக்கமாக பிஎஃப் பணத்தை எடுக்க நாம் விண்ணப்பம், செய்துவிட்டு வார கணக்கில் காத்திருக்க வேண்டும். ஆனால் இந்த முறையில் நினைக்கும் போதெல்லாம் பணத்தை எடுத்து பயன்படுத்தலாம்.

புதிய விதிமுறைகளின்படி, தகுதியுள்ள சந்தாதாரர்கள் தங்களின் மொத்த பிஎஃப் சேமிப்பில் 50% முதல் 75% வரை மட்டுமே இந்த முறையில் எடுக்க அனுமதிக்கப்படலாம். உங்களின் மொத்த சேமிப்பில் குறைந்தது 25% பணம் கணக்கிலேயே லாக் செய்யப்படும். ஓய்வு காலத்திற்குப் பிறகு நிதிப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இந்த 25% பணத்தை எடுக்க முடியாது.

புதிய EPFO 3.0 மூலம் 5 லட்சம் ரூபாய் வரையிலான பிஎஃப் அட்வான்ஸ் (Ad–vance Claims) கோரிக்கைகள் அதிகாரிகள் தலையீடு இன்றி தானியங்கி முறையில் (Auto–settlement) விரைவாகச் செயலாக்கப்படும். அதாவது 5 லட்சம் ரூபாய் வரை விண்ணப்பித்த உடனே கிடைத்துவிடும் அதிகாரிகள் ஆய்வு, அனுமதி ஆகியவை எல்லாம் இருக்காது. இந்த வசதியைப் பயன்படுத்த உங்களது பிஎஃப் கணக்கு தயாராக இருக்க பின்வரும் விஷயங்களை சரிபார்த்துக் கொள்வது நல்லது.

1. உங்களது யுஏஎன் (UAN) எண்ணுடன் ஆதார் கார்டை இணைக்க வேண்டும்.

2. EPFO போர்ட்டலில் வங்கி கணக்கு விவரங்களைச் சரிபார்த்து வைத்திருக்க வேண்டும்.

3. ஆதார், பான் (PAN) மற்றும் EPFO கணக்குகளில் உங்களது பெயர் மற்றும் விவரங்கள் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும்.

4. வங்கி கணக்குடன் இணைக்கப்பட்ட UPI ஐடியை உறுதி செய்து கொள்ள வேண்டும். இவற்றை தயாராக வைத்திருந்தால் உங்கள் பிஎஃப் கணக்கில் இருக்கும் பணத்தை வங்கி கணக்கில் இருக்கும் பணத்தை போல நினைத்த போதெல்லாம் எடுத்து செலவிட முடியும்.

# 1-ந்தேதி முதல் 125 நாள் வேலைத்திட்டம்!



புதுடெல்லி, ஜூன். 20–
விக்சித் பாரத் கிராம வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார உத்தரவாத திட்டம் (விபி.ஜி ராம் ஜி) கடந்த ஆண்டு சட்டமாக்கப்பட்டது. இதே திட்டம் இதற்கு முன்பு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் என்ற பெயரில் 100 நாட்கள் வேலை என்ற செயலாகத்துடன் இருந்தது. ஆனால் புதிய திட்டத்தில் வேலை நாட்கள் 125 ஆக்கப்பட்டு உள்ளது. இதற்காக இடைக்கால நிதி ஒதுக்கீடாக கடந்த 9–ந்தேதி ரூ.95 ஆயிரத்து 692 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்த புதிய திட்டம் அடுத்த மாதம் 1–ந்தேதி முதல் அமலுக்கு வருகிறது. இதனால் அதற்கான முன்னேற்பாடு பணிகளை மத்திய அரசு செய்து வருகிறது. திட்டத்தை செயல்படுத்த மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகளுக்கு உதவுவதற்காக பல்வேறு யுக்திகள் வகுக்கப்பட்டு உள்ளன. இதில் ஒரு அம்சமாக 100 மண்டல அதிகாரிகள் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு நியமிக்கப்படுகிறார்கள். இந்த அதிகாரிகள் ஒருங்கிணைப்பாளராகவும், வள அதிகாரிகளாகவும் செயல்படுவார்கள்.

நாடு முழுவதும் இந்த திட்டத்துக்கான தயார் நிலையை உறுதி செய்வதற்காக அமைச்சகம் விரிவான முன்பயிற்சி ஏற்பாடுகளை மேற்கொண்டது. டெல்லியில் இதுதொடர்பாக பயிற்சி கூட்டம் நடைபெற்றது. அதில் பணிபுரியும் ஊழியர்களுக்கான மின் கே.ஒய்.சி. செயல்முறையை நிறைவு செய்தல், நாடுமுழுவதும் முக அங்கீகார அடிப்படையிலான வருகைப்பதிவு முறையை அறிமுகப்படுத்துதல், சிறப்பு டிஜிட்டல் தளங்களை உருவாக்குதல் மேலும் திறன்களை மேம்படுத்துதல் போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது.

# சட்டசபை மாற்றுத் தலைவர்களாக 6 பேர் நியமனம்!



சென்னை, ஜூன். 20–
சட்டசபை நிகழ்வுகளை சபாநாயகர் வழிநடத்துவார். அவர் அவையில் இல்லாத போது, துணை சபாநாயகர் வழிநடத்துவார். இருவரும் அவையில் இல்லாதபோது. மாற்றுத் தலைவர்கள் அவையை நடத்துவார்கள். அந்தவகையில், 17–வது சட்டசபையின் மாற்றுத் தலைவர்களை சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் அறிவித்துள்ளார்.

அதன்படி, மாற்றுத்தலைவர்களாக விஜய் சரவணன் (த.வெ.க.). சத்யபாமா (த.வெ.க.). மதார் பதுருதீன் (த.வெ.க.), காதர் பாட்சா முத்துராமலிங்கம் (தி.மு.க.), தளவாய் சுந்தரம் (அ.தி.மு.க.), தாரகை கத்பட் (காங்கிரஸ்) ஆகியோர் நியமிக்கப் பட்டுள்ளனர்.

பொதுவாக, மாற்றுத்தலைவர்களாக ஆளுங்கட்சியை சேர்ந்தவர்களே நியமிக்கப்படுவது வழக்கம். ஆனால், தி.மு.க.வை சேர்ந்த காதர் பாட்சா முத்துராமலிங்கமும், அ.தி.மு.க.வை சேர்ந்த தளவாய் சுந்தரமும், காங்கிரஸ் கட்சியை சேர்ந்த தாரகை கத்பட்டும் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், மாற்றுத்தலைவர்கள் 6 பேரில், 2 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# ‘ஃபோன் பே’ பயனர்கள் கவனத்திற்கு... இனி செயலற்ற வேலட்டுகளுக்கு ரூ. 100 கட்டணம்!




சென்னை, ஜூன். 20–
12 மாதங்கள் தொடர்ந்து பயன்படுத்தப்படாத வேலட்டுகளுக்கு ஒவ்வொரு காலாண்டிற்கும் (3 மாதங்களுக்கு ஒருமுறை ) ரூ. 100 பராமரிப்புக் கட்டணமாக வசூலிக்கப்படும் என ஃபோன்பே அறிவித்துள்ளது.

இந்த கட்டண வசூல் வேலட்டில் பணம் இல்லாதவர்களுக்கானது அல்ல, மாறாக வேலட்டில் பணம் இருந்து, 365 நாட்களுக்கு அதனைப் பயன்படுத்தாமல் இருந்தால் அது செயலற்றதாகிவிடும் என்றும், கட்டணம் கழிக்கப்படுவதற்கு 15 நாட்களுக்கு முன்பு பயனர்களுக்கு ஒரு அறிவிப்பு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்தக் கழித்தல் வேலட்டில் உள்ள பணத்திற்குதான் பொருந்தும் எனவும், வங்கிக்கணக்கில் உள்ள பணம் பிடித்தம் செய்யப்படாது என விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

உங்கள் வேலட்டில் ரூ. 100–க்கும் குறைவாக (உதாரணமாக ரூ. 20 அல்லது ரூ. 50) இருந்தால், அந்த முழுத் தொகையும் கழிக்கப்பட்டு வேலட் இருப்பு ‘பூஜ்ஜியம்’ ஆக்கப்படும்.

இதனால் வேலட்டில் பணம் வைத்திருப்பவர்கள் தேவை இல்லையென்றாலும், அதனை உபயோகிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாக பயனர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

உங்கள் வேலட்டில் பணம் இருந்தால், உடனே அதைக் கொண்டு ஏதேனும் ஒரு மொபைல் ரீசார்ஜ் அல்லது கடைகளில் பணப்பரிவர்த்தனை செய்து வேலட்டை மீண்டும் ஆக்டிவேட் செய்யுங்கள். இல்லையெனில் வேலட்டில் இருக்கும் பணத்தை உடனடியாக உங்கள் வங்கி கணக்கிற்கு மாற்றிக் கொள்ளுங்கள் அல்லது முழுமையாகச் செலவழித்து விடுங்கள்.

# டிக்கெட் இல்லாமல் பயணம்; ரயிலில் இனி ரூ.500 அபராதம்!



சென்னை, ஜூன். 20–
ரயில்களில் டிக்கெட் இல்லாமல் பயணித்தால், தற்போது வசூலிக்கப்படும் அபராதம் 250 ரூபாய், ஜூலை 1 முதல் 500 ரூபாயாக உயர்த்தி வசூலிக்கப்படும்.

நாடு முழுதும், 13,000 பயணியர் ரயில்களில், தினமும் 2.50 கோடிக்கும் அதிகமானோர், பயணம் செய்கின்றனர். ரயிலில் உரிய டிக்கெட் இல்லாமல் பயணிப்போர் மீது, ரயில்வே சட்டம் 1989ன் படி, 250 ரூபாய் அபராதம் விதிக்கப்படுகிறது. தற்போது, இந்தத் தொகையை உயர்த்தி, ரயில்வே புதிய அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து, ரயில்வே அதிகாரிகள் கூறியதாவது: ரயில்களில் உரிய டிக்கெட் இல்லாமல் பயணிப்போரிடம், டிக்கெட் தொகையுடன், 250 ரூபாய் அபராதம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

அபராதத் தொகையை, 500 ரூபாயாக, ரயில்வே உயர்த்தி உள்ளது. இதை ஜூலை 1 முதல் அமல்படுத்த வேண்டும் என, அனைத்து மண்டலங்களுக்கும், ரயில்வே உத்தரவிட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# டெல்லியில் 23-ந்தேதி கூடுகிறது காவிரி மேலாண்மை ஆணையம்!



புதுடெல்லி, ஜூன் 20–
காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்ட கர்நாடக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு எல்லாம் தயாராக வைக்கப்பட்டு இருக்கிறது. மத்திய நீர்வளத்துறை இதற்கு அனுமதி கொடுத்தால் அணை கட்டும் பணியை தொடங்கிவிடலாம் என கர்நாடகம் நினைக்கிறது.

இதற்கு தமிழ்நாடுஅரசு தரப்பில் கடுமையான எதிர்ப்புகள் முன் வைக்கப்பட்டு உள்ளன. சமீபத்தில் முதல்–அமைச்சர் விஜய் டெல்லி வந்திருந்தபோது பிரதமரிடம் இதனை வலியுறுத்தினார். இந்த நிலையில் தமிழக சட்டசபையில் மேகதாது அணை திட்டத்தை எதிர்த்து அவர் தனித்தீர்மானம் கொண்டு வந்தார். அது நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. இந்த சூழ்நிலையில் காவிரி மேலாண்மை ஆணையம் 23–ந்தேதி கூடுகிறது. இந்த கூட்டத்தில் மேகதாது அணை பற்றிய விவாதம் இருக்கலாம் என அனைவரும் எதிர்பார்க்கிறார்கள்.



# “தொட்டதெல்லாம் துலங்க... புதிய முயற்சிகளில் வெற்றி தரும் எளிய பரிகாரங்கள்!”




**விநாயகர் வழிபாடு**

புதிய நிலம் வாங்குதல், வீடு கட்டுதல் அல்லது தொழில் தொடங்குவதற்கு முன் அருகிலுள்ள விநாயகர் கோவிலில் தேங்காய் உடைத்து வழிபடுவது நல்லது.

**மஞ்சள்–குங்கும பூஜை**

நில ஆவணங்கள், வீட்டுத் திட்ட வரைபடங்கள் அல்லது தொழில் தொடர்பான ஆவணங்களுக்கு மஞ்சள், குங்குமம் வைத்து பூஜை செய்யலாம்.

**வியாழக்கிழமை தட்சிணாமூர்த்தி வழிபாடு**

தடைகள் நீங்கி காரிய வெற்றி பெற வியாழக்கிழமைகளில் தட்சிணாமூர்த்திக்கு மஞ்சள் மலர் சாத்தி வழிபடலாம்.

**காலபைரவர் வழிபாடு**

அஷ்டமி நாளில் காலபைரவருக்கு நெய் தீபம் ஏற்றி வழிபட்டால் தாமதங்கள் விலகி முன்னேற்றம் ஏற்படும் என்று நம்பப்படுகிறது.

**அன்னதானம்**

புதிய முயற்சி தொடங்கும் நாளில் ஏழை எளியவர்களுக்கு உணவு வழங்குவது சிறப்பான பலனை தரும்.

**பசுமாட்டிற்கு உணவு**

அகத்திக்கீரை அல்லது வாழைப்பழம் வழங்குவது செல்வ வளம் பெருகும் பரிகாரமாக கருதப்படுகிறது.

# ஆசிரியர்களே அலர்ட்! டெட் தேர்வுக்கான ஹால் டிக்கெட் வெளியீடு..!




சென்னை, ஜூன். 20–
ஆசிரியர்களுக்கான டெட் தேர்வு ஹால் டிக்கெட் இணையத்தில் வெளியாகி உள்ளது.

ஜூலை 4,5 ஆம் தேதிகளில் டெட் தேர்வு நடைபெற உள்ள நிலையில், ஹால் டிக்கெட் வெளியாகி உள்ளது. இதனை எப்படி பதிவிறக்கம் செய்யலாம்.

# சினிமா துளிகள்..!

## ஹாலிவுட், பாலிவுட், கோலிவுட் ஹாட் அப்டேட்ஸ்!



**ஹாலிவுட்**

நடிகை Anne Hathaway தனது மூன்றாவது குழந்தையை எதிர்பார்ப்பதாக சமூக வலைதளத்தில் அறிவித்துள்ளார். ரசிகர்கள் மற்றும் திரையுலக பிரபலங்கள் வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.

புகழ்பெற்ற தொலைக்காட்சி இயக்குநர் James Burrows 85 வயதில் காலமானார். ‘Cheers’, ‘Friends’, ‘Will & Grace’ உள்ளிட்ட தொடர்களின் வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்தவர்.

புதிய ஹாலிவுட் த்ரில்லர் Palm Grove படத்தில் Kate Hudson மற்றும் Ana de Armas இணைந்து நடிக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

**பாலிவுட்**

Cocktail 2 இன்று உலகம் முழுவதும் வெளியாகியுள்ளது. Shahid Kapoor, Kriti Sanon மற்றும் Rashmika Mandan–naநடித்துள்ள இப்படத்திற்கு ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

நடிகை Diana Penty பகிர்ந்த புதிய புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி, Cocktail படத்தின் நினைவுகளை ரசிகர்களிடம் மீண்டும் எழுப்பியுள்ளது.

காமெடியன் Samay Raina தனது பிரபல நிகழ்ச்சியான India’s Got Latent Season 2 விரைவில் திரும்பவுள்ளதாக அறிவித்துள்ளார்.

**கோலிவுட்**

Vijay நடித்துள்ள Jana Nayagan திரைப்படம் குறித்து ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது. படத்தின் வெளியீட்டு தேதி தொடர்பான தகவல்கள் சமூக வலைதளங்களில் அதிகம் பேசப்பட்டு வருகின்றன.

தமிழ் திரையுலகில் பல புதிய திரைப்படங்களின் படப்பிடிப்புகள் மற்றும் OTT வெளியீடுகள் தொடர்பான அறிவிப்புகள் வெளியாகியுள்ளன.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## இந்த அறிகுறிகள் இருந்தால், உடனே பரிசோதனை செய்துகொள்ளுங்கள்..!




இந்தியப் பெண்களிடையே மார்பகப் புற்றுநோய் தற்போது மிக வேகமாக அதிகரித்து வரும் உடல்நலப் பிரச்சினைகளில் ஒன்றாகும். பெண்களைப் பாதிக்கும் புற்றுநோய்களில் மார்பகப் புற்றுநோய் மிகவும் பொதுவானது. இதில் கவலைக்குரிய விஷயம் என்னவென்றால், ஆரம்பக் கட்டத்தில் இந்நோய்க்கான பெரிய அறிகுறிகள் எதுவும் தென்படாமல் இருக்கலாம். இதனால்தான் பல பெண்களுக்கு இந்நோய் தாமதமாகவே கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

நல்ல செய்தி என்னவென்றால், ஆரம்பக் 1கட்டத்திலேயே கண்டறியப்பட்டால் மார்பகப் புற்றுநோயை முழுமையாகக் குணப்படுத்த முடியும். எனவே, ஒவ்வொரு பெண்ணும் தங்கள் உடலில் ஏற்படும் மிகச்சிறிய மாற்றங்களைக் கூடக் கூர்ந்து கவனிப்பது அவசியம்.

மார்பகம் அல்லது அக்குளில் தோன்றும் புதிய கட்டி மார்பகப் புற்றுநோயின் முக்கிய எச்சரிக்கை அறிகுறிகளில் ஒன்றாகும். இந்தக் கட்டிகள் பெரும்பாலும் வலி இல்லாதவை என்பதால், பலர் அவற்றைப் புறக்கணிக்கின்றனர். ஆனால், அவை கடினமாகவோ அல்லது சுற்றியுள்ள திசுக்களிலிருந்து மாறுபட்டதாகவோ உணர்ந்தால், உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும்.

மேலும், மார்பகத்தின் அளவு, வடிவம் அல்லது தோலின் தன்மையில் திடீர் மாற்றங்கள் தென்பட்டாலும் கவனமாக இருக்க வேண்டும். ஒரு மார்பகம் மற்றொன்றை விட வழக்கத்திற்கு மாறாகப் பெரிதாகத் தெரிவது, வீக்கம் அல்லது வடிவத்தில் மாற்றம் போன்ற அறிகுறிகளும் மருத்துவப் பரிசோதனை தேவைப்படுவதைக் குறிக்கின்றன. மார்பகத் தோலில் ஏற்படும் மாற்றங்களும் முக்கியமான அறிகுறிகளாகக் கருதப்படுகின்றன. ஆரஞ்சுப் பழத்தின் தோலைப் போன்ற தோற்றம், பள்ளம் விழுதல், சுருக்கங்கள் அல்லது வழக்கத்திற்கு மாறான தடிமன் போன்ற அறிகுறிகளைப் புறக்கணிக்கக் கூடாது.

முலையிலிருந்து ரத்தம் கலந்த திரவம், தெளிவான திரவம் அல்லது அழுத்தம் இல்லாமலே திரவம் வெளியேறுதல் போன்ற பிரச்சினைகள் இருந்தால், உடனடியாக மருத்துவப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். முலைக்காம்பு திடீரென உள்நோக்கி இழுக்கப்படுவது அல்லது அதன் வடிவத்தில் மாற்றம் ஏற்படுவதும் எச்சரிக்கை அறிகுறியாகக் கருதப்படுகிறது. பல பெண்கள் மார்பக வலியை ஒரு சாதாரண ஹார்மோன் மாற்றமாகவே கருதுகின்றனர்.

இருப்பினும், வலி நீண்ட காலத்திற்கு ஒரே இடத்தில் நீடித்தாலோ அல்லது வழக்கத்திற்கு மாறாக உணர்ந்தாலோ மருத்துவரை அணுகுவது நல்லது. அதேபோல, மார்பகத் தோல் சிவந்து போதல், அரிப்பு, செதில் செதிலாக உரிதல் அல்லது முலைக்காம்பைச் சுற்றியுள்ள தோல் தடித்தல் போன்ற அறிகுறிகளையும் கவனிக்க வேண்டும். இவை சில சமயங்களில் சாதாரணத் தொற்றுகளால் ஏற்படலாம் என்றாலும், சில சந்தர்ப்பங்களில் புற்றுநோயின் அறிகுறிகளாகவும் இருக்கலாம்.

மார்பகப் புற்றுநோய் அபாயத்தைக் குறைக்க ஆரோக்கியமான வாழ்க்கை முறை மிகவும் முக்கியம். வழக்கமான உடற்பயிற்சி, சமச்சீரான உணவு, உடல் எடையைக் கட்டுக்குள் வைத்திருத்தல் மற்றும் புகைபிடித்தல், மது அருந்துதல் போன்ற பழக்கங்களைத் தவிர்த்தல் ஆகியவை பரிந்துரைக்கப்படுகின்றன. 40 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் மருத்துவர்களின் அறிவுறுத்தலின்படி மேமோகிராபி (mammography) பரிசோதனைகளைச் செய்துகொள்ள வேண்டும்.

குடும்பத்தில் யாருக்காவது மார்பகப் புற்றுநோய் இருந்ததற்கான வரலாறு இருந்தால், நீங்கள் கூடுதல் விழிப்புடன் இருக்க வேண்டும். மாதந்தோறும் மார்பகத்தைச் சுய பரிசோதனை செய்துகொள்வதன் மூலம், சிறிய மாற்றங்களைக் கூட ஆரம்பத்திலேயே கண்டறிய முடியும். நினைவில் கொள்ளுங்கள்... மார்பகப் புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவது உயிரைக் காப்பாற்ற உதவும். அதனால்தான், எந்தவொரு சிறிய அறிகுறியையும் அலட்சியப்படுத்தாமல் உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெறுவது சிறந்தது.



தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை இணைந்து நடத்திய மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்ட 56 மாற்றுத்திறனாளி வேலைநாடுநர்களுக்கு தனியார் துறைகளில் பணிபுரிவதற்கான பணி நியமன ஆணைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வைத்திநாதன் வழங்கினார்.

# 10, 12-ம் வகுப்பு தேர்வில் முதல் 3 இடங்களை பிடித்த மாணவர்களுக்கு விரைவில் விருது வழங்குகிறார் விஜய்!

சென்னை, ஜூன். 20–

தமிழக முதல்–அமைச்சர் விஜய் அரசியலுக்கு வருவதற்கு முன்பாகவே 10, 12–ம் வகுப்பு தேர்வில் மாவட்ட அளவில் முதல் 3 இடங்களை பிடிக்கும் மாணவ–மாணவிகளுக்கு விருது வழங்கி கவுரவித்து வருகிறார். அந்தவகையில் 4–வது ஆண்டாக பரிசளிப்பு விழா விரைவில் நடக்க இருக்கிறது.





இந்த ஆண்டு 10, 12–ம் வகுப்பு பொதுத்தேர்தவில் மாவட்ட அளவில் முதல் 3 இடங்களை பிடித்தவர்களுக்கு முதல்–அமைச்சர் விஜய் பரிசு வழங்க இருக்கிறார். இதற்காக மாவட்ட அளவில் மாணவர்களின் தகவல்களை சேகரிக்கும் பணியில் தவெக நிர்வாகிகள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த பட்டியல் தயார் செய்யப்பட்ட பிறகு, தேதி முடிவு செய்யப்பட உள்ளது. இந்த நிகழ்வு செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தில் உள்ள தனியார் மண்டபத்தில் நடக்க இருக்கிறது.

# இந்திய எல்லையில் உலகின் மிகப்பெரிய அணையை கட்டும் சீனா: இந்தியா அதிரடி திட்டம்!

புதுடெல்லி, ஜூன். 20–

இந்திய எல்லையிலிருந்து சுமார் 50 கிலோமீட்டர் தொலைவில், திபெத்தியப் பகுதியில் உலகின் மிகப்பெரிய நீர்மின் அணையாக அமையவிருக்கும் திட்டத்தின் கட்டுமானத்தை சீன தொடங்கியுள்ளது.

இதுகுறித்து உளவுத்துறையின் பிரத்யேகத் தகவல்கள் மற்றும் சமீபத்திய செயற்கைக்கோள் படங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.



இந்தியாவின் தொடர்ச்சியான எதிர்ப்புகளையும் மீறி பெய்ஜிங் இந்தத் திட்டத்தை வேகமாக முன்னெடுத்து வருகிறது. சீனாவின் அணையில் இருந்து திடீரென நீர் திறந்துவிடப்படுவதைத் தடுக்கும் ஒரு அரணாகச் செயல்படவும், இரு பகுதிகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதைத் தடுக்க வும், சியாங் ஆற்றின் மீது ஒரு நீர்மின் அணையை இந்தியா கட்டத் திட்டமிட்டு ள்ளது. இந்தியா தற்போது, இந்த நதி தொடர்பாக பெய்ஜிங்கின் ஒவ்வொரு நகர்வையும் உன்னிப்பாகக் கண்காணித்துக்கொண்டே, தனது பதிலடியை விரைவு படுத்தவும் முயன்று வருகிறது.

# இங்கிலாந்தில் ரெயில்கள் மோதல்: ஓட்டுநர் பலி; 90 பேர் காயம்!

லண்டன், ஜூன். 20–

இங்கிலாந்து நாட்டின் லண்டன் நகருக்கு வடக்கே பெட்போர்டுஷைர் நகருக்கு தெற்கே மத்திய லண்டன் நகர் பகுதியில் இருந்து மத்திய இங்கிலாந்து பகுதிகளுக்கு பயணிகளை கொண்டு செல்லும் வழியில் வழக்கம்போல் ரெயில்கள் சென்று கொண்டிருந்தன.

அப்போது, 2 ரெயில்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்தில் சிக்கின. இந்த சம்பவத்தில் ஒரு ரெயி லின் ஓட்டுநர் பலியானார். 90 பேர் காயம் அடைந்த னர். அவர்களில் பலரு க்கு பலத்த காயம் ஏற்ப ட்டு உள்ளது. இதனால் உயிரிழப்பு அதிகரிக்க கூடும் என அஞ்சப்படு கிறது. இந்த விபத்தில், காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு சிகிச்சைக்கு கொண்டு செல்லப்பட்டு உள்ளனர். குண்டு வெடித்தது போன்று உணர்ந்தேன் என்று, அதனை பார்த்த, ரெயிலின் முன்புற பெட்டி ஒன்றில் அமர்ந்திருந்த பீட்டர் நாப் என்பவர் கூறியுள்ளார்.



ஆம்புலன்சுகள் வரவழைக்கப்பட்டன. தீயணைப்பு துறையினரும் மற்றும் போலீசாரும் சம்பவ பகுதிக்கு உடனடியாக சென்றனர். அந்த பகுதியே புகை மற்றும் தூசு படிந்து போர்க்களம் போன்று காட்சியளித்தது. ரெயில் விபத்துக்கான காரணம் பற்றி உடனடியாக தெரிய வரவில்லை.

# தமிழகத்தில் ஐஏஎஸ் அதிகாரிகள் இடமாற்றம்!

சென்னை, ஜூன். 20–

ஐஏஎஸ் அதிகாரிகளை இடமாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:

* பிரபு சங்கர்– சுரங்கத் துறை இயக்குனர்
* ஜெயசீலன்– சுற்றுலாத்துறை இயக்குனர்
* ஆகாஷ் – சிவகங்கை கலெக்டர்
* நிஷாந்த் கிருஷ்ணா – மதுரை கலெக்டர்
* பொன்மணி – அறநிலையத்துறை கூடுதல் கமிஷனர்
* இன்னசென்ட் திவ்யா – கோ–ஆப்டெக்ஸ் மேலாண் இயக்குனர்
* கவிதா ராமு – டுபிட்கோ மேலாண் இயக்குனர்
* மோகன் – பெருநகர போக்குவரத்து கழக மேலாண் இயக்குனர்
* ஸ்ரேயா சிங் – சென்னை மாநகராட்சி இணை கமிஷனர்
* ரமண சரஸ்வதி – நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண் இயக்குனர்



நிஷாந்த் கிருஷ்ணா

சிவகங்கை கலெக்டராக பொறுப்பேற்ற நிஷாந்த் கிருஷ்ணா, ஒரே நாளில் மதுரைக்கு மாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டது.

கடந்த வியாழக்கிழை சிவகங்கை மாவட்ட கலெக்டராக நிஷாந்த் கிருஷ்ணா பொறுப்பேற்றுக்கொண்டார். தற்போது ஒரே நாளில் மதுரைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார். இதனா ல் மதுரை மாவட்ட கலெக்டர் ஆகாஷ் சிவகங்கைக்கு மாற்றப்பட்டார்.

# தங்கம் விலை உயர்வு...!

சென்னை, ஜூன். 20–

தங்கம் விலை சற்று உயர்ந்துள்ளது. அதன்படி சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று சவரனுக்கு ரூ.240 உயர்ந்து, ஒரு சவரன் ரூ.1,08,800–க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.30 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.13,600–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலையைப் பொறுத்த வரையில் இன்று மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.255–க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 55 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.



# புதுவை அமைச்சர்களுக்கு இலாகா ஒதுக்குவதில் தொடரும் இழுபறி!

புதுச்சேரி, ஜூன். 20–

பாஜக மேலிட பொறுப்பாளர் நிர்மல்குமார் சுரானா நேற்று புதுவைக்கு வந்தார். அவர் முதல்–அமைச்சர் ரங்கசாமியை கோரிமேட்டில் உள்ள அவரின் இல்ல வளாகத்தில் உள்ள டென்னிஸ் கோர்ட்டில் சந்தித்து பேசினார்.

அப்போது கட்சி தலைமை தெரிவித்த கருத்துக்களை அவர் முதல்–அமைச்சர் ரங்கசாமியிடம் தெரிவித்தார். அவருடன் மாநில பாஜக தலைவர் ராமலிங்கம் உடனிருந்தார். இதைத்தொடர்ந்து மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா முதல்–அமைச்சர் ரங்கசாமியை செல்போனில் தொடர்புகொண்டு பேசியதாக கூறப்படுகிறது. இதனை என்ஆர்.காங்கிரஸ், பாஜக தரப்பு உறுதி செய்யவில்லை.



இருப்பினும் பாஜக மேலிட பொறுப்பாளர் சந்திப்பை தொடர்ந்து அமைச்சர்களுக்கு இலாகாக்கள் ஒதுக்கப்படும் என தெரிகிறது. இதன்மூலம் புதுவையில் தொடரும் இலாகா இழுபறிக்கு முற்றுப்புள்ளி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# த.வெ.க. உறுப்பினர் சேர்க்கை எண்ணிக்கை 2 கோடியை தாண்டியது!

சென்னை, ஜூன். 20–

த.வெ.க.வின் உறுப்பினர் சேர்க்கை தற்போது 2 கோடியை கடந்துள்ளது.

நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் முதல் முறையாக தேர்தல் களம் கண்ட த.வெ.க. 108 இடங்களை கைப்பற்றி தனி பெரும் கட்சியாக உருவெடுத்தது. 34.92 சதவீத வாக்குகளை அள்ளி தி.மு.க., அ.தி.மு.க. பாரம்பரிய கட்சிகளுக்கு அதிர்ச்சி அளித்தது. இதை தொடர்ந்து கடந்த மே 10–ந்தேதி தமிழகத்தின் முதல்–அமைச்சராக விஜய் பதவியேற்றார். இதற்கிடையே, த.வெ.க.வின் உறுப்பினர் சேர்க்கை தற்போது 2 கோடியை கடந்துள்ளது. தென்னிந்தியாவில் தொடங்கப்பட்ட கட்சிகளில் அதிக உறுப்பினர்களை கொண்ட முதல் கட்சியாக த.வெ.க. தற்போது உருவெடுத்து இருக்கிறது. இதனை சமூக வலைத்தளங்களில் குறிப்பிட்டு த.வெ.க.வினர் மகிழ்ச்சியடைந்து வருகின்றனர்.



# வேலை வாய்ப்பு

## “தமிழக பொதுப்பணித்துறையில் 760 அப்ரண்டிஸ் இடங்கள்...!




பொதுப்பணித்துறையில் 760 அப்ரண்டிஸ் பயிற்சிப் பணியிடங்களுக்கு தகுதியான பொறியியல், டிப்ளமோ மற்றும் கலை மற்றும் அறிவியல் பட்டதாரிகள் ஜூன் 25 ஆம் தேதிக்குள் NATS இணையதளம் வழியாக விண்ணப்பிக்கலாம்.

இது ஒரு நிரந்தர வேலைவாய்ப்பு அல்ல, ஓராண்டு காலத்திற்கான பயிற்சிப் பணி மட்டுமே ஆகும். தேர்வு செய்யப்படுபவர்கள் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பணியமர்த்தப்படுவார்கள்.

**பணியிடங்களின் விவரங்கள்**

பொறியியல் பட்டதாரிகள் (Degree): சிவில் – 360, EEE – 28, ஆர்க்கிடெக்சர் – 12

டிப்ளமோ பயிற்சியாளர்கள்: சிவில் – 150, EEE – 5, ஆர்க்கிடெக்சர் – 5

பொறியியல் அல்லாத பட்டதாரிகள்: கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் (BA, BSc, BCom, BBA, BCA போன்றவை) – 200

**தகுதி மற்றும் கல்வி விவரங்கள்**

விண்ணப்பதாரர்கள் சம்பந்தப்பட்ட பிரிவுகளில் முழுநேரப் படிப்பாகப் பட்டம் அல்லது டிப்ளமோ முடித்திருக்க வேண்டும். கலை மற்றும் அறிவியல் பட்டதாரிகள் யுஜிசி (UGC) அங்கீகாரம் பெற்ற கல்லூரிகளில் படித்திருக்க வேண்டும். முக்கியமாக, 2022, 2023, 2024 மற்றும் 2025 ஆகிய ஆண்டுகளில் படிப்பை நிறைவு செய்த, தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே இந்த வாய்ப்பிற்கு விண்ணப்பிக்க தகுதியானவர்கள்.

**மாத உதவித்தொகை**

பட்டதாரி மற்றும் பொறியியல் அல்லாத பட்டதாரிகளுக்கு: ரூ.9,000

டிப்ளமோ முடித்த பயிற்சியாளர்களுக்கு: ரூ.8,000

**தேர்வு செய்யப்படும் முறை**

விண்ணப்பிக்கும் நபர்கள், அவர்கள் தங்களது படிப்பில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் முதற்கட்டமாகத் தேர்வு செய்யப்படுவார்கள். அதனைத் தொடர்ந்து, நேரிடி சான்றிதழ் சரிபார்ப்பு நடத்தப்பட்டு இறுதிப் பட்டியல் வெளியிடப்படும். எந்தவிதத் தேர்வும் கிடையாது.

**முக்கிய தேதிகள் மற்றும் விண்ணப்பிக்கும் முறை**

தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் மத்திய அரசின் அதிகாரப்பூர்வ இணையதளமான https://nats.education.gov.in/boat–srp.php மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க தொடங்கிய நாள்: 20.05.2026

விண்ணப்பிக்க கடைசி நாள்: 25.06.2026

முதற்கட்ட தேர்வுப் பட்டியல் வெளியீடு: 03.07.2026

சான்றிதழ் சரிபார்ப்பு: 15.07.2026 முதல் 17.07.2026 வரை.

# நீட் மாணவர்கள் தொலைபேசியில் மனநல ஆலோசனை பெறலாம்!

சென்னை, ஜூன். 20–

தமிழக அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு செயலாளர் தாரேஸ் அகமது வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளதாவது:–



மாணவர்களின் மன உறுதி மற்றும் மனநலம் காக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் “நட்புடன் உங்களோடு” திட்டம் மூலம் தொலைபேசி வழியாக மனநல ஆலோசனைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. எனவே, ‘டெலி கவுன்சிலிங் பெறுவதற்கு மாணவர்கள் மற்றும் பெற்றோர் தயங்காமல் 14416 அல்லது 104 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு மனநல ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளலாம். பயிற்சி பெற்ற மனநல ஆலோசகர்கள், டாக்டர்கள் மூலம் இந்த சேவை வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



இஸ்மாயில் லக்கி
டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




# மம்தாவுக்கு மேலும் நெருக்கடி; கட்சி நிதி குறித்து விசாரணை கோரும் அதிருப்தியாளர்கள்!



புதுடெல்லி, ஜூன் 20–

ரிதாப்ரதா பானர்ஜி தலைமையிலான அதிருப்தி எம்.எல்.ஏ.க்கள், திரிணமுல் காங்கிரஸ் கட்சியின் நிதியான ரூ.675 கோடி குறித்து போலீசார் விசாரணை கோரியுள்ளதால் கட்சிக்குள் உட்கட்சி மோதல் வெடித்துள்ளது.

திரிணமுல் காங்., கட்சிக்குள் உட்கட்சி பூசல் வெடித்தது. கட்சிக்குள் பேசி தீர்த்துக் கொள்ள வேண்டிய பிரச்னையை சபாநாயகர் வரை கொண்டு சென்றதாக கூறி, அதிருப்தி எம்.எல்.ஏ., ரிதபிரதா பானர்ஜி உள்ளிட்டோர் திரிணமுல் காங்., கட்சியில் இருந்து நீக்கப்பட்டனர்.

இதையடுத்து, ரித பிரதா பானர்ஜி தலைமையில் அணிவகுத்த 60 எம்.எல்.ஏ.,க்கள், அவரை எதிர்க்கட்சித் தலைவராக தேர்ந்தெடுத்தனர். லோக்சபா எம்.பி.,க்கள் 28 பேரில், 20 பேர் தேசியவாத இந்திய குடிமக்கள் கட்சியில் இணைந்தனர். இதனால், திரிணமுல் காங்., கட்சிக்குள் உட்கட்சி பூசல் உச்ச கட்டத்தை எட்டியுள்ளது.

தற்போது கட்சியின் நிதி தொடர்பாக பெரும் சர்ச்சை எழுந்துள்ளது. கட்சிக்குள் ஏற்பட்ட பிளவைத் தொடர்ந்து, ரூ.675 கோடி மதிப்பிலான திரிணமுல் கட்சியின் வங்கிக் கணக்குகளை முடக்கவும், நிதியின் ஆதாரம் குறித்து விசாரணை நடத்தவும் அதிருப்தி கோஷ்டியினர் மற்றும் முன்னாள் பொருளாளர் கோரியுள்ளனர்.

இந்த நிதிகள் சட்டவிரோதமான வழிகளில் பெறப்பட்டிருக்கலாம் என அதிருப்தி எம்எல்ஏக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இதன் அடிப்படையில் நிதியின் ஆதாரம் மற்றும் பரிவர்த்தனைகள் குறித்து விசாரணை நடத்த போலீசாரிடம் புகார் அளித்துள்ளனர். இதனால் கட்சிக்குள் உட்கட்சி மோதல் வெடித்துள்ளது.இதற்கிடையில், மேற்கு வங்க முன்னாள் அமைச்சர் ஜோதிப்ரியா மல்லிக் கட்சியில் உள்ள அனைத்து பதவிகளிலிருந்தும் ராஜினாமா செய்தார்.

அதே நேரத்தில் சிலிகுரி மேயர் கௌதம் தேப் தனது மாநகராட்சிப் பதவியிலிருந்து விலகினார். திரிணமுல் செய்தித் தொடர்பாளர் குணால் கோஷ், அதிருப்தியாளர்களின் இந்த நடவடிக்கை குறித்து கேள்வி எழுப்பி உள்ளார். கட்சியின் நிதியில் ஏதேனும் முறைகேட்டை எம்.எல்.ஏ.க்கள் கண்டறிந்திருந்தால், அவர்கள் கட்சித் தலைவருக்குத் தெரிவித்திருக்க வேண்டும் என தெரிவித்தார்.

# நட்சத்திர ஓட்டல் அறை போல் மாறிய வந்தே பாரத் ரெயில்!



இப்படித்தான் ரெயில் பயணத்தை வர்ணிப்பார்கள். தொலை தூரங்களுக்கு இரவிலும் பயணம் மேற்கொள்ளும் பயணிகளுக்கு ரெயில் பயணம் ஒரு வரப்பிரசாதம்.

2–ம் வகுப்பு தூங்கும் வசதி கொண்ட பெட்டிகளில்தான் அதிகமான பயணிகள் பயணிக்கிறார்கள். முதல் வகுப்பு மற்றும் ஏ.சி. பெட்டிகளிலும் பயணம் செய்வதை ரெயில் பயணிகள் விரும்புகிறார்கள்.

இதற்கு காரணம் வீடுகளில் தூங்குவதை போல் தூங்கிக் கொண்டு இரவு நேரங்களில் ஏற்படும் இயற்கை உபாதைகளை வீடுகளில் கழிப்பது போலவே கழித்தபடியும் பயணிக்கலாம் என்பதுதான். இதற்காக ரெயில்வே நிர்வாகம் எவ்வளவோ வசதிகளை செய்தாலும் பயணம் சொகுசாக இல்லை... கழிவறை சுத்தமாக இல்லை... தண்ணீர் வரவில்லை... என்ற குறைபாடு பயணிகளிடம் இருக்கிறது.

இந்த நிலையில்தான் வந்தே பாரத் என்ற புதிய ரெயிலை ரெயில்வே நிர்வாகம் அறிமுகப்படுத்தியது. பகல் நேரத்தில் மட்டும் இயக்கப்படும் இந்த ரெயில்களுக்கு மவுசு அதிகம் உள்ளது. முற்றிலும் குளிர்சாதன வசதி மற்றும் சொகுசான இருக்கைகள், சுத்தமான பராமரிப்பும் இருப்பதால் பயணிகளிடம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

அதே நேரம் வந்தே பாரத் ரெயில் பெட்டிகளும் தூங்கும் வசதிகளாக மாறி வந்தால் எப்படி இருக்கும் என்ற எண்ணம் பயணிகளிடம் ஏற்பட்டது. தற்போது பயணிகள் கனவை நனவாக்கும் வகையில் வந்தே பாரத் ரெயிலிலும் தூங்கும் வசதி கொண்ட பெட்டிகள் தயாராகி வருகிறது.

முதல்கட்டமாக முதல் வகுப்பு ஏ.சி. பெட்டி தயார் செய்யப்பட்டு உள்ளது. இந்த பெட்டியின் வடிவமைப்பு சமூக வலைதளங்களில் வெளியிடப்பட்டு உள்ளது. அதை பார்த்ததும் ரெயில் பயணிகள் மூக்கின் மீது விரலை வைக்காத கதைதான். பிளாட்பாரத்தில் இருந்து ரெயிலுக்குள் ஏறியதும் ஓட்டல் அறைக்கு நடந்து செல்லும் பாதையை போல் நீண்டு செல்கிறது பாதை. அதன் ஓரத்தில் வரிசையாக அறைகள். எந்த அறைக்குள் நாம் பயணிக்க வேண்டுமோ அந்த அறை கதவை திறந்து உள்ளே சென்றால் 'வாவ்... இது ரெயில் பெட்டியா...? இல்லை சொகுசு விடுதியா என்று நினைக்கும் அளவுக்கு உள்கட்ட வடிவமைப்பு பிரமிக்க வைக்கிறது. 4 பேர் பயணிக்கும் இந்த அறைக்குள் மேல்படுக்கைக்கு செல்ல படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.

வழக்கமாக ரெயில் பெட்டிகளில் மேல்படுக்கைக்கு செல்வதற்கு ஏணி போன்ற அமைப்புதான் இருக்கும். அதில் ஏறுவதற்கு முதியவர்களும், பெண்களும் மிகவும் சிரமப்படுவார்கள். ஆனால் இப்போது வீடுகளில் படிக்கட்டுகளில் ஏறி செல்வது போல் இந்த பெட்டியில் வடிவமைப்பு செய்துள்ளனர்.

மேலும் மின்விளக்கு அலங்காரங்கள் ஓட்டல் அறைகளை பிரதிபலிக்கின்றன. கண்காணிப்பு கேமராக்கள், பாதுகாப்பு அம்சங்கள், மேம்படுத்தப்பட்ட கழிவறைகள் என ஒவ்வொன்றும் தண்டவாளத்தில் பறக்கும் நவீன நட்சத்திர விடுதியை தான் நினைவுப்படுத்துகின்றன. முதல் தூங்கும் வசதி கொண்ட இந்த ரெயில் பெங்களூரு–மும்பை இடையே இயக்கப்பட உள்ளது. இரவு முழுவதும் இந்த வழித்தடத்தில் சாதாரண விரைவு ரெயில்களில் பயணித்த பயணிகள் இனி சொகுசான ஓட்டல் அறைக்குள் இருந்து, தூங்கி உற்சாகமாக எழுந்து வரலாம்.

இப்போது பெங்களூரு – மும்பை வழித்தடத்தில் இயக்கினாலும், அடுத்தடுத்து மற்ற நகரங்களுக்கும் இந்த வந்தே பாரத் ரெயில் வரும். இவ்வளவு வசதி இருக்கே கட்டணம் எப்படி இருக்குமோ? என்ற எண்ணமும் வரும். பஸ் பயணத்திற்கும், ரெயில் பயணத்திற்கும் வித்தியாசம் உண்டு. அதேப்போல் ரெயில் பயணத்திற்கும், விமான பயணத்திற்கும் வித்தியாசம் இருக்கும். இது தரையில் ஓடும் விமானத்தை போன்றது. எனவே கட்டணமும் அதற்கு ஏற்ப மாறுபடத்தான் செய்யும். இன்னும் ரெயில்வே நிர்வாகம் கட்டணத்தை நிர்ணயித்து அறிவிக்கவில்லை.

# செந்தில் பாலாஜி வீட்டில் போலீசார்...!



சென்னை, ஜூன். 20–

சென்னையில் உள்ள முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் வீட்டுக்கு சென்ற கரூர் போலீஸ் படையினர், அவர் வீட்டில் யாரும் இல்லாததால் திரும்பிச்சென்றனர்.

ஊழல் புகார்களுக்கு ஆளான முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி மீது அரசு போக்குவரத்துக்கழகத்துக்கு ஆட்சேர்க்கைக்கு லஞ்சம் பெற்ற வழக்கு நிலுவையில் உள்ளது. இது தொடர்பாக லஞ்ச ஒழிப்புத்துறை, அமலாக்கத்துறை விசாரணை நடந்து வருகிறது.

இது மட்டுமின்றி, மின் வாரிய டிரான்ஸ்பார்மர் கொள்முதல் ஊழல் குற்றச்சாட்டுகளும் உள்ளன. செந்தில் பாலாஜியின் தம்பி அசோக்கும் ஊழல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். இருவரும் தற்போது ஜாமினில் உள்ளனர். இந்நிலையில் சென்னை யில் உள்ள செந்தில்பாலாஜி யின் வீட்டுக்கு கரூர் போலீசார் (ஜூன் 20) சென்றனர். அவர் வீட்டில் இல்லாத காரணத்தால் போலீசார் திரும்பி சென்றனர். எந்த வழக்கிற்காக விசாரணை நடத்த வந்தனர் என்ற தகவல் வெளியாகவில்லை. இவரது சகோதரர் அசோக்கை போலீசார் தேடுவதாக தகவல் வெளியாகி உள்ளது. திமுக ஆட்சிக்காலத்தில் இந்த ஊழல் வழக்குகளில் விசாரணை நடத்துவதற்கு போலீசார் ஆர்வம் காட்டவி ல்லை. நீதிமன்ற உத்தரவு களின்படி பெயரளவுக்கு மட்டும் விசாரணை நடந்தது. இப்போது ஆட்சி மாறிய நிலையில், வழக்கு விசாரணை சூடு பிடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பள்ளி வழிபாட்டு கூட்டங்களில் காயத்ரி மந்திரம் கட்டாயம்!



ராய்ப்பூர், ஜூன். 20–

சத்தீஸ்கரில், மாநில கல்வித்துறையின் கீழ் உள்ள அனைத்து பள்ளிக ளிலும், வழிபாட்டு கூட்ட ங்களில் தேசிய கீதத்துடன் சேர்த்து, காயத்ரி மந்திரம் மற்றும் பிற ஹிந்து மத பிரார்த்தனைகளை தினமும் கட்டாயம் பாடும் நடைமுறை முதல் அமலுக்கு வந்தது. சத்தீஸ்கரில் முதல்வர் விஷ்ணு தியோ சாய் தலைமையில் பா.ஜ., ஆட்சி நடக்கிறது. இங்கு, மாநில கல்வித்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகள், புதிய கல்வியாண்டிற்காக திறக்கப்பட்டன.

முன்னதாக, பள்ளிக்கல்வித்துறை சார்பில் அனைத்து மாவட்ட கல்வி அதிகாரிகளுக்கும் கடந்த 12ம் தேதி சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. அதன் விபரம்:

இனி பள்ளிகளில், ஒரு நாளில் மூன்று வெவ்வேறு நேரங்களில் கட்டாயம் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்:

காலை வழிபாட்டுக் கூட்டத்தில் தேசிய கீதம், தீப மந்திரம், சரஸ்வதி வந்தனம், குரு மந்திரம் மற்றும் சிறந்த ஆளுமைகளின் வாழ்க்கை வரலாறு வாசிப்பு ஆகியவை இடம்பெற வேண்டும்.

மதிய உணவு இடைவேளையின்போது, மாணவர்கள் அனைவரும் இணைந்து உணவுக்கான பிரார்த்தனையை மேற்கொள்ள வேண்டும். அதேபோல், பள்ளி நேரம் முடியும்போது, காயத்ரி மந்திரம், சாந்தி மந்திரம் ஆகியவற்றை பாட வேண்டும். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நடைமுறையை அனைத்து பள்ளிகளும் கட்டாயம் பின்பற்றுவதை மாவட்ட கல்வி அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என சத்தீஸ்கர் அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவுக்கு, காங்கிரஸ் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், 'பள்ளிகளில், பிற மதங்களைச் சேர்ந்த மாணவர்களும் படிக்கின்றனர். 'அவ்வாறு இருக்கும்போது ஹிந்து மத பிரார்த்தனைகளை கட்டாயமாக்குவதன் மூலம், ஆர்.எஸ்.எஸ்., கொள்கையை பள்ளிகளில் திணிக்க பா.ஜ., அரசு முயற்சிக்கிறது. எனவே, இந்த உத்தரவை மாநில அரசு உடனே திரும்ப பெற வேண்டும்' என, குறிப்பிட்டு உள்ளது.

# ரேஷன் அரிசி மூட்டையில் எடை குறைப்பு; ஆண்டுக்கு ரூ.300 கோடி முறைகேடு?



சென்னை, ஜூன். 20–

ரேஷன் கடைகளுக்கு அரிசி மூட்டைகள் அனுப்பு வதில் எடை குறைப்பு செய்யப்படுவதால், ஆண்டுக்கு 300 கோடி ரூபாய் அளவுக்கு ஊழல் நடப்பதாக புகார் கூறப்படுகிறது.

தமிழக ரேஷன் கடைகளில், 2.25 கோடி கார்டுதாரர்களுக்கு இலவசமாக அரிசி வழங்கப்படுகிறது. மாதம், 3.63 லட்சம் டன் அரிசி தேவை.

இதில், 2.05 லட்சம் டன்னை இலவசமாகவும், 92,000 டன் அரிசி, கிலோ 8.30 ரூபாய் விலையிலும் மத்திய அரசு வழங்குகிறது. மீதி அரிசியை, தமிழக அரசு கிலோ 22.50 ரூபாய்க்கு வாங்குகிறது.

இந்திய உணவு கழகத்திடம் இருந்து அரிசியை வாங்கி, தமிழக நுகர்பொருள் வாணிப கழகம் தன் கிடங் குகளில் இருப்பு வைக் கிறது. அங்கிருந்து, கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக ரேஷன் கடைகளுக்கு லாரிகளில் அனுப்புகிறது. அதன்படி, 50 கிலோ சாக்கு பையில் அரிசி அனுப்பப்படுகிறது. சாக்கு பை எடையுடன் சேர்த்து அரிசி மூட்டை, 50 கிலோ, 650 கிராம் இருக்க வேண்டும்.

ஆனால், ஒவ்வொரு கடைக்கும், ஒரு மூட்டையில், 1 – 3 கிலோ வரை எடை குறைவாகவே அனுப்பப்படுவதாக புகார்கள் எழுகின்றன.

அரிசி கார்டு வைத்திருப்பதில், சிலர் அரிசி வாங்குவதில்லை. எனவே, 3.63 லட்சம் டன் அரிசியில், மாதம் சராசரியாக 3 லட்சம் டன் வழங்கப்படுகிறது.

ஒரு மூட்டைக்கு சராசரியாக, 1 கிலோ குறைவாக இருப்பதாக வைத்துக் கொண்டால், 60 லட்சம் மூட்டைகளில் 60 லட்சம் கிலோ அரிசி குறைகிறது.

ஒரு கிலோ அரிசியின் வெளிச்சந்தை விலை 40 ரூபாய். எனவே, மாதத்திற்கு சராசரியாக 24 கோடி ரூபாய் என, ஆண்டுக்கு 300 கோடி ரூபாய் அளவுக்கு ஊழல் நடப்பது தெரியவந்துள்ளது.

ரேஷன் கடை ஊழியர்கள் கூறியதாவது: கடைகளில் அரிசியை இறக்கும்போது, ஊழியர் முன்னிலையில் எடை போட்டு காட்ட வேண்டும்; இதை பின்பற்றுவதில்லை. ஒரு மூட்டைக்கு, 2 – 3 கிலோ குறைவாக வருகிறது. இந்த இழப்பை சரிகட்டவே, கார்டுதாரர்களுக்கு அரிசி வழங்குவதில், ஊழியர்கள் தவறு செய்கின்றனர்.

எடை குறைவாக அனுப்புவதால் கிடைக்கும் அரிசியை, கள்ளச் சந்தையில் விற்று ஊழல் செய்கின்றனர். இதில் பலருக்கு தொடர்புள்ளது. இந்த விவகாரத்தில் முழு கவனம் செலுத்தி, சரியான எடையில் அனுப்புவதை அரசு உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# செவ்வாய் விண்கல்லின் உள்ளே இருந்தது என்ன?



கனடா, ஜூன். 20–

கனடாவில் உள்ள ராயல் ஒன்டாரியோ அருங்காட்சியகத்தின் சேகரிப்பில் இடம்பெற்றுள்ள, NWA 8171 எனப்படும் செவ்வாய் விண்கல்லின் ஒரு சிறிய துண்டை சர்வதேச விஞ்ஞானிகள் குழு ஒன்று பகுப்பாய்வு செய்தது.

இந்நிலையில் வரலாற்றிலேயே முதன்முறையாக, புதிய பாறை வடிவத்தையும் கார்னெட் என்ற கனிமத்தையும் ஆராய்ச்சியாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.

முன்னதாக வேதியியல் மதிப்பீடுகள் அசாதாரணமாகத் தோன்றியதால் லேசர் கருவிகள் மற்றும் எலக்ட்ரான் நுண்ணோக்கியைப் பயன்படுத்தி உன்னிப்பாக ஆராய்ந்தனர்

இந்நிலையில் பண்டைய எகிப்தியர்கள், ரோமானியர்கள் மற்றும் விக்டோரியன் காலத்தினரிடையே பிரபலமாக இருந்த அடர் சிவப்பு நிற இரத்தினக்கல்லான கார்னெட்டைக் கண்டனர். இந்த ஆய்வில் பங்கேற்ற, போர்ட்ஸ்மவுத் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஜேம்ஸ் டார்லிங், இந்தக் கண்டுபிடிப்புகள் செவ்வாய் கிரகத்தின் புவியியல் குறித்த புதிய பரிமாணத்தை தருகிறது என்று கூறினார்.

# கரப்பான்பூச்சி ஜனதா கட்சி மீண்டும் ஆர்ப்பாட்டம்!



புதுடெல்லி, ஜூன். 20–

சமூக வலைத்தளங்களில் புகழ்பெற்ற கரப்பான்பூச்சி ஜனதா கட்சி, இந்திய கல்வி முறையின் தோல்விகளுக்கு எதிராக டெல்லியில் போராட்டம் நடத்தியது. அதற்கு முன்பு, தனது அமைப்பை விரிவுபடுத்த மூன்று புதிய செய்தி தொடர்பாளர்களை நியமித்தது. இதன்படி, புலனாய்வு பத்திரிகையாளர் சவுரவ் தாஸ் தலைமை செய்தி தொடர்பாளராகவும், திரைப்பட இயக்குநர் விஜேதா தஹியா மற்றும் அசுதோஷ் ரங்கா ஆகியோர் செய்தி தொடர்பாளர்களாகவும் நியமிக்கப்பட்டனர்.

நீட் தேர்வு வினாத்தாள் கசிவு விவகாரத்தில் மத்திய கல்வி மந்திரி தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி கடந்த 6–ந்தேதி டெல்லி ஜந்தர் மந்தரில் போராட்டம் அறிவிக்கப்பட்டது. இதற்காக அபிஜீத் திப்கே அமெரிக்காவில் இருந்து அன்று காலை இந்தியாவுக்கு திரும்பினார்.

இந்த போராட்டத்தின்போது, மத்திய கல்வி மந்திரி தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தினார். வினாத்தாள் கசிவு சம்பவங்களால், 5 மாணவர்கள் தற்கொலை செய்துள்ளனர் என்றும் அப்போது கூறினார். சமீபத்தில், ஜெய்ப்பூரில் நடந்த ஆர்ப்பாட்டத்தின்போது, திப்கேவை தோளில் ஏற்றி ஆதரவாளர்கள் போராடியபோது மர்ம நபர்கள் அவரை கன்னத்தில் அறைந்து, பலமுறை தாக்கியது பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த சூழலில், டெல்லியில் 2–வது முறையாக திப்கே தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

# தமிழக வெற்றி கழகம் அலுவலகம் திறப்பு விழா!



ஜோலார்பேட்டை, ஜூன். 20–

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றியம் புதுப்பேட்டை பகுதியில் தமிழக வெற்றி கழகம் ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றிய இளைஞரணி அலுவலகம் திறப்பு விழா இளைஞர் அணி இணை அமைப்பாளர் என். விக்னேஷ் சிவன் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராக திருப்பத்தூர் மாவட்ட செயலாளர் முனிசாமி கலந்து கொண்டு அலுவலகத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்கள்.

உடன் ஒன்றிய செயலாளர் எம். முனிசாமி ஒன்றிய இணை செயலாளர் சஞ்சீவ் காந்தி இளைஞரணி அமைப்பாளர் ரவிநாத் அம்மணாங்கோயில் ஊராட்சி செயலாளர் ரமணன் தவெக ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றியம் தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் அனிஷ் கரண், தில்லைவாணன் ஒன்றிய பொருளாளர், மற்றும் மாவட்ட நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் மற்றும் ஒன்றிய பொறுப்பாளர்கள் நிர்வாகிகள் மகளிர் அணி நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் பல்வேறு அணியை சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



திண்டுக்கல் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக பொறுப்பேற்ற ராஜாசெல்வம்






Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020